2026 GROUP IV TEST – 4
General Tamil Explanations

1. **விடை : A**
   - உயிர் எழுத்துகள் பன்னிரெண்டும், இடையின மெய் எழுத்துகள் ஆறும் பிறக்கும் இடத்தால் ஒன்றுபடுகின்றன.
   - நன்னுலார் இவ்விரு எழுத்துகளும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன என்று குறிப்பிடுகிறார்.

2. **விடை : D**

(எழுத்துகள்)		**(இடப்பிறப்பு)**
வல்லினம்	–	மார்பு
மெல்லினம்	–	மூக்கு
ஆய்த எழுத்து	–	தலை

3. **விடை : C**
   - அவ்வழி
   - ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்
   - மேவும் மென்மை, மூக்கு உரம்பெறும் **வன்மை – (நன்னூல் 75)**

4. **விடை : B**
   - 'அ, ஆ' ஆகிய இரண்டு உயிர் எழுத்துகளும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.
   - 'உ, ஊ, ஒ, ஓ, ஔ' ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.
   - இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன.

5. **விடை : C**
   - "அங்காப்பு" என்ற நன்னூல் சொல் உணர்த்தும் பொருள் வாய் திறத்தல் என்பதாகும்.

6. **விடை : A**

(நாக்கின் பகுதி)		**(மெய் எழுத்துகள்)**
நாவின் முதற்பகுதி	–	க், ங்
நாவின் இடைப்பகுதி	–	ச், ஞ்
நாவின் நுனிப்பகுதி	–	ட், ண்

7. **விடை : C**
   - உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் இதழ்களைக் குவிப்பதால் பிறக்கின்றன.
   - 'ஐ' வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றது.

SHANKAR IAS ACADEMY

8. **விடை : D**

- ஏனெனில், ர், ழ் – ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
- "அண்ணம் நுனிநா வருட ரழ வரும்"– (நன்னூல் 83)

9. **விடை : B**

- இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்றன
- **"இஈ எஏ ஐஅங் காப்போடு**
  அண்பல் முதல்நா விளிம்புற வருமே" – (நன்னூல்77)

10. **விடை : B**

- "அண்ணம் நுனிநா வருட ரழ வரும்" **– (நன்னூல் 83)**

11. **விடை : D**

- 'ன்' என்னும் மெய்யெழுத்தின் பிறப்பு குறித்த நன்னூல் கொள்கை **:**
- "அண்ணம் நுனிநா நனியுறின் றன வரும்" – **(நன்னூல் 86)**

12. **விடை : D**

(எழுத்து) **(உறுப்பு)**

- ம – இதழ்

13. **விடை : B**

- ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்து வருடுவதால் பிறக்கிறது.
- 'ல' என்பது அண்பல் முதலையும், 'ள' என்பது அண்ணத்தையும் முறையே நா விளிம்பு தடித்து ஒற்றவும் வருடவும் பிறக்கின்றன.

14. **விடை : A**

- ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது மற்றும் வாயைத் திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது.

15. **விடை : A**

- அல்வழிப் புணர்ச்சியில் வன்தொடர்க் குற்றியலுகரத்தைத் தவிர ஏனைய குற்றியலுகரங்களின் முன் வரும் வல்லினம் மிகாது.
- வேற்றுமைப் புணர்ச்சியில் சில மென்தொடர்க் குற்றியலுகரங்கள் தமக்கு இனமான வன்றொடர் குற்றியலுகரமாக மாறிப் புணரும்.
- ட், ற் என்னும் இரு மெய்களோடு ஊர்ந்துவரும் நெடில்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழியோடு சேரும்போது ஒற்று இரட்டித்துப் புணரும். அல்வழிப்புணர்ச்சியில் அல்ல.

SHANKAR IAS ACADEMY

16. **விடை : C**

- 'நெடிலோடு உயிர்த் தொடர்க் குற்றியலுகரங்களுள் டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே' – இவ்விதிக்கு பொருந்தாத சான்று "தெங்குக்கால்" ஆகும்.
- ஏனெனில் . தெள்கு + கால் = தெள்குகால் (தெள்கு – பேன்)
- இது, "இடைத்தொடர் ஆய்தத் தொடரொற் றிடையின் மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை " என்ற விதிப்படி புணரும்.

17. **விடை : A**

பிரித்து எழுதுக:

- கயிற்று வண்டி= கயிறு + வண்டி

18. **விடை : B**

- 'உறவு + அழகு = உறவழகு' – இப்புணர்ச்சிக்குரிய சரியான விதி 'முற்றுமற்று ஒரே வழி' ஆகும்.

19. **விடை : B**

- வன்றொடர் அல்லாத குற்றியலுகரங்கள் அல்வழிப் புணர்ச்சியில் புணரும் போது வருமொழி வல்லினம் மிகாது.
- **வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி – நன்னூல், 181**

20. **விடை : D**

- புணர்ச்சி விதிகளுக்குப் புறம்பான தவறான வடிவம் : நாக்குக்கடிது
- ஏனெனில், வல்லினத்தொடர்க் குற்றியலுகரம் தவிர, ஏனைய குற்றியலுகரங்களின்முன் வரும் வல்லினம், அல்வழிப் புணர்ச்சியில் மிகாது.
- சரியான வடிவம் "நாகு + கடிது = நாகு கடிது" ஆகும்.

21. **விடை : C**

திசைப் பெயர்ப் புணர்ச்சியில் தவறான இணை:

- வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
- வடக்கு என்னும் நிலைமொழி கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான க், கு நீங்கிப் புணரும்.

22. **விடை : B**

- நெடில்தொடர்க் குற்றியலுகரம் – வீட்டுத் தோட்டம்
- உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் – கிணற்றுத்தவளை
- ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் – எஃகு சிறிது
- மென்தொடர்க் குற்றியலுகரம் – பந்து கடிது

23. **விடை : B**

- 'செம்பு + குடம்' வேற்றுமைப் புணர்ச்சியில் 'செப்புக்குடம்' என்றே புணரும். ஏனெனில் மெல்லினத்தொடர்க் குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வல்லினத்தொடராய் முடியும்.

SHANKAR IAS ACADEMY

- "மென்றொடர் மொழியுள் சில வேற்றுமையில் தம்மின வன்றொட ராகா மன்னே" என்ற விதிப்படி மாறும்.

24. **விடை : C**
- மேற்கு + நாடு' என்பது புணரும் போது 'மேல்நாடு', 'மேனாடு' என இருவகையாகப் புணரும்.
- நிலைமொழியில் 'கு' நீங்கி, 'ற்' ஆனது 'ல்' ஆகவும் 'ன்' ஆகவும் மாறும்.

25. **விடை : B**

தவறாக பிரிந்துள்ள சொல்: கீழ்நாடு
- கீழ்நாடு = கிழக்கு + நாடு
- இங்கு நிலைமொழியின் இறுதியாகிய க்கு நீங்கி, ழ என்னும் உயிர்மெய்யில் + அ) அகரம் நீங்கி, கி என்னும் முதல் எழுத்து கீ என நீண்டு, கீழ் + நாடு கீழ்நாடு எனப் புணர்ந்தது.

26. **விடை : C**
- 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' என்னும் விதிப்படி புணர்ந்துள்ள சொல் மரக்கலன் ஆகும்.
- மரம் + கலன் = மரக்கலன்
- மகரமெய் கெட்டு வல்லினம் மிக்குப் புணரும்.

27. **விடை : A**
- மூதூர் – முதுமை + ஊர்
- முது + ஊர் – ஈறுபோதல்
- மூது + ஊர் – ஆதிநீடல்
- மூத் + ஊர் – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
- மூதூர் – (த்+ஊ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
- எனவே, 'மூதூர்' – இச்சொல்லில் பயின்று வராத புணர்ச்சி விதி " இனமிகல் " ஆகும்

28. **விடை : B**

சேர்த்து எழுதுக:
- மண் + மகள்= மண்மகள்

29. **விடை : B**
- 'பைந்தமிழ்' – என்னும் சொல் நிலைமாற்றமடைந்து புணரும் சரியான நன்னூல் விதி "ஈறுபோதல் – அடி அகரம் 'ஐ' ஆதல் □ இணையவும் □ இனமிகல்" ஆகும்.
- பைந்தமிழ் = பசுமை + தமிழ்
  - பசு + தமிழ் – ஈறுபோதல்
  - பைசு + தமிழ் – அடி அகரம் 'ஐ' ஆதல்
  - பை + தமிழ் – இனையவும் 'சு' கெட்டது
  - பைந்தமிழ் – (ந்) இனமிகல் என்னும் விதிப்படி புணரும்.

SHANKAR IAS ACADEMY

30. **விடை : C**

- ‘பைந்தமிழ்’ என்ற சொல்லாக்கப் புணர்ச்சியில், பைசு + தமிழ் என்ற நிலையிலிருந்து ‘சு’ என்ற எழுத்து நீங்குவதற்குக் காரணமான விதி
- பைந்தமிழ் = பசுமை + தமிழ்
  - பசு + தமிழ் – ஈறுபோதல்
  - பைசு + தமிழ் – அடி அகரம் ‘ஐ’ ஆதல்
  - பை + தமிழ் – இனையவும் ‘சு’ கெட்டது
  - பைந்தமிழ் – (ந்) இனமிகல் என்னும் விதிப்படி புணரும்

31. **விடை : D**

- மகர ஈற்றுப் புணர்ச்சிக்கு’ உரிய சரியான சான்று “பாடவேளை” ஆகும்.
- (எ–டு) பாடம் + வேளை – பாடவேளை
- மகரமெய் கெட்டுப் புணர்ந்துள்ளது.

32. **விடை : B**

சேர்த்து எழுதுக:

- கல் + தீது = கற்றீது

33. **விடை : C**

- சே + அழகு’ என்ற சொற்கள் புணரும் போது, சேயழகு மற்றும் சேவழகு என்று புணரும்.

34. **விடை : D**

சேர்த்து எழுதுக:

- என் + தந்தை = என்றந்தை

35. **விடை : D**

தவறாகப் பிரிந்துள்ள சொல்: பன்முகம்

- பன்முகம் = பல் + முகம்

36. **விடை : C**

சேர்த்து எழுதுக:

- மண் + தீது = மண்டீது

37. **விடை : A**

பிரித்து எழுதுக:

- கட்குடம் = கள் + குடம்

38. **விடை : B**

- காட்டிடைச் சென்றான்’ – ஏழாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகுந்துள்ளது.

SHANKAR IAS ACADEMY

39. **விடை : C**

- இரண்டாம் வேற்றுமைத் தொகையாயிருப்பினும் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் வல்லினம் மிகும்.

40. **விடை : B**

- புலித்தோல் – ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகுந்துள்ளது.

41. **விடை : B**

- நான்காம் வேற்றுமையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

42. **விடை : B**

- குருவிக்கூடு – ஆறாம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

43. **விடை : C**

- 'என', 'ஆக' போன்ற சொற்கள் சொல்லுருபுகள் ஆகும்.

44. **விடை : D**

- மிகப் பெரியவர்
  - மிக என்பது உரிச்சொல் ஆகும்.
  - மிக என்னும் உரிச்சொல்லின்பின் வல்லினம் மிகும்.

45. **விடை : B**

- வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

46. **விடை : A**

- சந்திப்பிழையான தொடர் **:** கொல்க்களிறு
- கொல் + களிறு = கொல்களிறு

47. **விடை : D**

பொருந்தாத இணை:

- ஊண் – உணவு

48. **விடை : D**

- இர – பிச்சை எடு
- இற – செத்துப்போ
- தவலை – பாத்திரம்
- தவளை – உயிரினம்

49. **விடை : B**

- சரியான மயங்கொலிச் சொற்கள் பயின்று வந்துள்ள தொடர் "தீய பழக்கங்களைச் சமூகத்திலிருந்து ஒழிக்க வேண்டும்' என்பதாகும்.

SHANKAR IAS ACADEMY

50. **விடை : C**

- தமிழில் உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு கொண்டு, பொருள் வேறுபாடு தரும் 'மயங்கொலி' எழுத்துகள் மொத்தம் 8 உள்ளன.

51. **விடை : D**

ஒலி வேறுபாடு	
அலம்	கலப்பை
அளம்	உப்பளம்
அவல்	ஓர் உணவு, பள்ளம்
அலி	ஆண் பெண் அல்லாதது
அளி	கொடு
அழி	கெடு, அழித்துவிடு
ஆலம்	விஷம்
ஆழம்	பள்ளம்

52. **விடை : C**

ஒலி வேறுபாடு	
உளர்தல்	தடவல், சுழலல்
உலர்தல்	காய்தல், வாடல்
உலம்	திரண்டகல்
உளம்	உள்ளம்
உலவு	உலாத்து
உழவு	பயிர்த்தொழில்
உளவு	வேவு, இரகசியம்

53. **விடை : B**

ஒலி வேறுபாடு	
அலை	கடல் அலை, அலைந்து திரிதல்
அளை	தயிர், பிசை
அழை	கூப்பிடு
அலகம்	யானைத்திப்பிலி
அளகம்	பெண்மயிர்
அலகு	பறவையின் மூக்கு, துடைப்பம்
அளகு	பெண்மயில்
அழகு	சிறப்பு
அலை	கடல் அலை, அலைந்து திரிதல்
அளை	தயிர், பிசை

SHANKAR IAS ACADEMY

54. **விடை : A**

- ஒலி வேறுபாடு

ஒலி வேறுபாடு	
வலை	மீன் பிடி வலை
வளை	பொந்து, வளையல், வளைவு, குனிதல்
வழை	ஒருவகை மரம், சுரபுன்னை மரம்

55. **விடை : B**

ஒலி வேறுபாடு	
விலா	வயிற்றின் பக்கப் பகுதி
விளா	விளாமரம்
விழா	திருவிழா
விலை	பொருளின் மதிப்பு
விளை	உண்டாக்கு
விழை	விரும்பு
விலங்கு	மிருகம், கையில் விலங்கிடுதல்
விளங்கு	ஒளிர், சிறப்புடன் இரு

56. **விடை : A**

ஒலி வேறுபாடு	
கலை	வித்தை, கலைந்துபோதல், ஆண்மான்
களை	வயலில் களையெடுத்தல், முகத்தின் ஒளி
கழை	மூங்கில்
கலம்	பாத்திரம், படகு, கப்பல்
களம்	இடம், போர்க்களம்
கலகம்	சிக்கல், சண்டை

57. **விடை : A**

ஒலி வேறுபாடு	
உலை	சமைக்க உலை வைத்தல், உலைக்களம்
உளை	பிடரிமயிர், சேறு
உழை	பாடுபடுதல், உழைப்பு

58. **விடை : D**

(சொல்)		(பொருள்)
உழ	–	பண்படுத்த
உளி	–	தறிக்குங் கருவி
உழி	–	இடம், பக்கம்
உளம்	–	உள்ளம்

SHANKAR IAS ACADEMY

59. **விடை : C**

- அழித்து விடு என்னும் பொருள் தரும் இருவேறு சொற்கள் அழி, ஒழி

60. **விடை : A**

பொருள்

- தயிரைச் சோற்றுடன் பிசைந்து – அளை
- இங்கும் ஓடித் திரிந்தது – அலை.

61. **விடை : B**

- பெயரிடை நிலையான ந் என்பதைப் பெற்று (ந் + அர் =நர்), ஓட்டுநர், அனுப்புநர், பெறுநர் என்று பெயர்ச்சொற்களாகின்றன. உறுப்பினர், குழுவினர், ஊரினர் முதலானவை (உறுப்பு, குழு, ஊர்) பெயர்ச்சொற்கள். அதனால், அவை இன் என்னும் சாரியையைப் பெற்று முடிந்துள்ளன.

62. **விடை : D**

- ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு.
  (எ.கா.,) மக்கள் + பேறு = மக்கட்பேறு.
- ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு.
  (எ.கா.,) நாள் + மீன் = நாண்மீன்.
- வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு.
  (எ.கா.,) கல் + சிலை= கற்சிலை, கடல் + கரை = கடற்கரை.
- லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு.
  (எ.கா.,) பல் + முகம் = பன்முகம்

63. **விடை : B**

- அல்வழியில், தனிக்குறிலை அடுத்து லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும்.
  (எ.கா.,) அல் + திணை = அஃறிணை; பல் + துளி = பஃறுளி.

64. **விடை : D**

இரு பொருள்	
தொலை	அழித்துவிடு, தூரம்
தொளை	சந்து, துவாரம்
பால்	உணவு
பாழ்	கேடு, சூனியம், அழிவு, வீண்
புல்	புல் பூண்டு
புள்	பறவை, கம்பு

65. **விடை : B**

- அகரம் சேய்மையில் உள்ளதையும், இகரம் அண்மையில் உள்ளதையும், உகரம் சேய்மைக்கும் அண்மைக்கும் இடையில் உள்ளதையும் சுட்டும்.

SHANKAR IAS ACADEMY

- இன்று 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.
- அ, இ சுட்டெழுத்துகள் தனியே நின்று சுட்டும்போது, ஆண் பெண் அனைவரையும் பொதுவாகச் சுட்டுகின்றன

66. **விடை : A**

- தற்காலத் தமிழில் இடைநிலைச் சுட்டுப் பெயர்களாகிய உவன், உவள், உவர், உது, உவை என்பன வழக்கில் இல்லை. ஆனால் சங்க கால இலக்கியங்களில் இவை வழக்கில் இருந்துள்ளன.
- உகரம் சேய்மைக்கும் அண்மைக்கும் இடையில் உள்ளதையும் சுட்டும்.
- உதுக்காண் என்றால், 'சற்றுத் தொலைவில் பார்' என்பது பொருள்.
- உப்பக்கம் என்றால், 'முதுகுப்பக்கம்' என்பது பொருள். உம்பர் என்றால், 'மேலே' என்பது பொருள்

67. **விடை : C**

- அப்பையன், இப்பெண், இவ்வீடு' என்று சுட்டும்போது, அச்சொற்கள் திணை, பால் வேறுபாடுகளையும் சுட்டுகின்றன.
- உவன் காண் குமுதன்; குமுதாக்கனும் ஊங்கு அவன் காண்;
- இவன் காண் கவயன்; கவயாக்கனும்
- ஈங்கு இவன் காண்.
- என்ற கம்பராமாயணப் பாடல் அடிகளில் மூன்று சுட்டுப்பெயர்களும் வந்துள்ளன.

68. **விடை : C**

- ஒவ்வொரு என்று வந்தால் அதன் பிறகு ஒருமைதான் வரவேண்டும்.
- எடுத்துக்காட்டு : ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சாரம் வழங்கப்பட்டது.

69. **விடை : B**

- தந்தை தன் மகனையும் மகளையும் அழைத்தார்.
  - (இதில் அழைத்தல் என்னும் வினையைச் செய்பவர் தந்தை. இது ஒருமைச் சொல். எனவே வினைமுற்றில் அழைத்தார் என்று வருகிறது.)

70. **விடை : C**

- விஷக்காய்ச்சல் நாகை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் இருக்கும் மக்களிடையே பரவி வருகிறது.
  - இந்தத் தொடரில் விஷக்காய்ச்சல், மாவட்டங்கள், மக்கள், ஆகிய அனைத்துமே பெயர்ச்சொற்கள்தாம்
  - எத்தனை பெயர்ச்சொற்கள் இருந்தாலும் எழுவாய் என்பது ஒன்றுதான்.
  - அதாவது, குறிப்பிட்ட வினையைச் செய்வது யார் அல்லது எது என்பதுதான் எழுவாய்.
  - இங்கே பரவுவது எது? மாவட்டங்களா, மக்களா, காய்ச்சலா? எனக் கேட்டால் காய்ச்சல் என்பது தெளிவாகத் தெரிகிறது.

SHANKAR IAS ACADEMY

71. **விடை : A**

- விளையாட்டுத் திடல் பணியாளர்களால் தூய்மை செய்யப்பட்டது. (இங்கு எழுவாய் பணியாளர்கள் அல்லர்.
- விளையாட்டுத் திடல்தான், அ்து ஒருமை, எனவே வினைமுற்றிலும் ஒருமை வருகிறது)

72. **விடை : D**

- கனி – கனிகள், சுவை – சுவைகள் இவை சரியான ஒருமை, பன்மைச் சொற்கள்.
- ஆனால், முக்கனி,மூவேந்தர் என்பது ஒன்றிற்கு மேற்பட்டவற்றைக் குறிப்பதால், இதனுடன் 'கள்' விகுதி சேர்த்து 'முக்கனிகள்,மூவேந்தர்கள்' ' என்று பேசுவதும் எழுதுவதும் தவறாகும்.

73. **விடை : C**

- எல்லா என்று வந்தால் பன்மை வர வேண்டும்.
- எடுத்துக்காட்டு : எல்லா உறுப்பினர்களும் கூட்டத்திற்கு வந்தனர்.

74. **விடை : A**

- குறிப்பு வினை முற்று பெயர்ச்சொல் அடியாகத் தோன்றும்; காலத்தைக் குறிப்பாகக் காட்டும்; ஆறினுள் வினை செய்பவனை மட்டும் உணர்த்தும்.
- பெயர்ச்சொல் அடியாகத் தோன்றும் என்பதால் பெயர்ச் சொற்களின் வகைகளான, ஆறு பெயர்களின் அடியாகவும் குறிப்பு வினைமுற்றுப் பிறக்கும்.
- (எ.கா.,)
  - குழையன், பொன்னன் – பொருள்
  - நாடன், ஊரன் – இடம்
  - தையினள், சித்திரையள் – காலம்
  - கண்ணன், மூக்கன் – சினை
  - கரியன், நல்லன் – குணம்
  - நடிகன், நடையன் – தொழில்

75. **விடை : B**

- எச்சச் சொற்களின் கருத்தை முடிப்பதற்குத் தேவைப்படும். மற்றொரு சொல் பெயராகவும் இருக்கலாம்; வினையாகவும் இருக்கலாம்.
- எச்சம், பெயரைக் கொண்டு முடிந்தால் பெயரெச்சம் எனப்படும்; வினையைக் கொண்டு முடிந்தால் வினையெச்சம் எனப்படும்.
- (எ–டு)
  - சிரித்த பெண் – சிரித்த – எச்சம் (பெயரெச்சம்)
  - பெண் – பெயர்
  - சிரித்து மகிழ்ந்தான் – சிரித்து – எச்சம் (வினையெச்சம்) மகிழ்ந்தான் – வினை

76. **விடை : B**

குறிப்பு வினைமுற்று

- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு "காலத்தை வெளிப்படையாக காட்டாது".

SHANKAR IAS ACADEMY

- செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, "குறிப்பு வினைமுற்று" எனப்படும்.
- குறிப்பு வினை முற்று பெயர்ச்சொல் அடியாகத் தோன்றும்.

77. **விடை : C**
- 'நடையன்' – தொழில் பெயர்ச்சொல்லின் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று.

78. **விடை : A**

குறிப்பு வினைமுற்று
- பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு "காலத்தை வெளிப்படையாக காட்டாது".
- செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, "குறிப்பு வினைமுற்று" எனப்படும்.
- குறிப்பு வினை முற்று பெயர்ச்சொல் அடியாகத் தோன்றும்;

79. **விடை : A**
- வெளுத்தான் – இவ்வினை, தன் வினை பிறவினை இரண்டிற்கும் பொதுவானது. அதனால் இது பொதுவினையாகும்.
- (வெளுத்தல் என்னும் தொழிலில் வெளுப்பித்தல் என்னும் பிறவினை வடிவம் மொழியில் காணப்படாததால் இது தன்வினை பிறவினை இரண்டிற்கும் பொதுவான வினையாகவே கருதப்படுகிறது).

80. **விடை : C**
- தெரிநிலை வினையெச்ச வாய்பாடுகளாகச் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்பனவற்றைக் கூறுவர்.
- இவற்றுள் முதல் ஐந்தும் இறந்த காலத்திற்குரியவை என்றும் நிகழ்காலத்திற்குரியது செய என்றும், எதிர்காலத்திற்குரியவை ஏனைய ஆறும் என்றும்கூறுவர்.
- இன்று செய்து, செய, செயின் என்னும் வினையெச்ச வடிவங்களே வழக்கில் காணப்படுகின்றன.
- (எ–டு)
  - பாரி எழுந்து வந்தான் – செய்து
  - நான் படிக்கப் போகிறேன் – செய
  - நீ வரின் மகிழ்வேன் – செயின்
- குறிப்பு வினையெச்ச விகுதியாக 'அ' இடம் பெறுகிறது.
- (எ–டு)
  - மெல்லப் பேசினான்.

81. **விடை : D**
- புலிகொல்யானை – இதில் கொல் என்னும் வினைப் பகுதி மட்டும் இடம் பெற்றுள்ளதால் 'புலியைக் கொல்லும் யானை' என்றும் 'புலியால் கொல்லப்படும் யானை' என்றும் பொருள் தருகிறது.
- இதனால் இவ்வினை செய்வினை செயப்பாட்டுவினை இரண்டிற்கும் பொது வினையாகும்.

SHANKAR IAS ACADEMY

82. **விடை : C**

- ‘நீ வரின் மகிழ்வேன்’ என்னும் தொடரில் செயின் என்னும் எதிர்காலத்திற்குரிய வினையெச்ச வாய்பாடு பயின்று வந்துள்ளது.

83. **விடை : B**

- ‘பெரிய வீடு’ என்பதன் இலக்கணக் குறிப்பு – குறிப்புப் பெயரெச்சம்
- பெயர் அடியாகப் பிறந்து, காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.

84. **விடை : A**

- ஓடி வந்தான்
- மெல்லப் போகிறான்
  - இவ்வெடுத்துக்காட்டுகளில் ஓடி, மெல்ல என்பன எச்சங்கள். அவை வந்தான், போகிறான் என்னும் வினைகளைக் கொண்டு முடிந்தமையால் வினையெச்சங்கள் எனப்பட்டன.

85. **விடை : A**

- ‘அடித்தான்’ என்ற செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது இணையும் துணைவினை படு.

செயப்பாட்டு வினை

- செயப்படுபொருளை அதாவது எதனை செய்தாரோ அதனை எழுவாயாகப் பெற்றும் எழுவாயோடு மூன்றாம் வேற்றுமை உருபான ஆல் பெற்றும் பயனிலையோடு படு என்பதை பெற்றும் வருகின்ற வாக்கியம் செயப்பாட்டு வினை வாக்கியம் ஆகும்.

86. **விடை : B**

- மொழி காலந்தோறும் வளர்ந்து வருகிறது. அதனால் மொழியில் புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன இக்கூற்றின்படி எச்சங்களின் வடிவ மாற்றத்திற்குக் காரணம் கால மாற்றத்தினால் ஏற்படும் மொழி வளர்ச்சி.

87. **விடை : D**

வினையெச்ச வாய்பாடு	**காலம்**
செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென	இறந்தகாலம்
செய	நிகழ்காலம்
செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு	எதிர்காலம்

88. **விடை : B**

- கற்றான் – உடன்பாட்டுவினை
- கல்லான் – எதிர்மறை வினை

உடன்பாட்டு வினை

- வருகிறேன், செய்கிறான் என்பன போன்ற வினைச்சொற்கள் ஒரு வினையைச் செய்வதையோ, செய்யப் போவதையோ அறிவிக்கின்றன. இவற்றை உடன்பாட்டு வினைகள் என்கிறோம்.

SHANKAR IAS ACADEMY

எதிர்மறை வினை

- வாரேன், செய்யேன் என்னும் சொற்கள் ஒருவன் ஒரு தொழிலைச் செய்ய உடன்படா நிலையை (அல்லது) எதிர்மறை நிலையைப் புலப்படுத்துகின்றன. எனவே இவை எதிர்மறைவினை எனப்படும்.

89. **விடை : C**

- **நடந்தான் – தன்வினை**
  - தன்வினை என்பது ஒருவர் தானே செய்வது. பிறவினை என்பது பிறரைச் செய்யும்படி ஆக்குவது.
- **நடத்தினான் – பிறவினை**
  - **எழுவாய்** ஒரு செயலைப் பிறரைக் கொண்டு செய்வித்தல் பிறவினை வாக்கியம் எனப்படும்.

90. **விடை : B**

- நான் படிக்கப் போகிறேன் என்னும் தொடரிலுள்ள வினையெச்ச வாய்ப்பாடு நிகழ்காலத்திற்கு உரியது.

91. **விடை : A**

- மெல்ல பேசு – குறிப்பு வினையெச்சம்
- அழகிய தோட்டம் – குறிப்புப் பெயரெச்சம்
- பெரிய வீடு – குறிப்புப் பெயரெச்சம்
- ஓடி வந்தான் – தெரிநிலை வினையெச்சம்

92. **விடை : B**

குறிப்பு முற்றுவினை

- நல்லவன் அவன் – பொருட்பெயர்கொண்டது
- நல்லது நிலம் – இடப்பெயர்கொண்டது
- நல்லது கார் – காலப்பெயர் கொண்டது
- நல்லது கை – சினைப் பெயர் கொண்டது
- நல்லது பசுமை – குணப்பெயர் கொண்டது
- நல்லது பிறப்பு – தொழிற்பெயர்கொண்டது

93. **விடை : B**

- 'மற்று அது அம்ம' என்பது பெயரின் புறத்துறுப்பாய், 'மற்று', 'அம்ம' என்னும் இடைச்சொற்கள் முன்னும் பின்னும் பல வந்தன
- வேற்றுமை உருபுகள், வினையுருபுகள், சாரியைகள், ஒப்புருபுகள், தத்தம் பொருளை உணர்த்துவன, இசை நிறைப்பன, அசை நிலைகள், குறிப்புப்பொருளை உணர்த்துவன என்னும் எட்டும் இடைச்சொற்களின் வகைகளாகும்.
  - சாரியைகள் – அன், அத்து, அற்று முதலியன
  - உவம உருபுகள் – போல, போன்ற, ஒப்ப, உறழ முதலியன தத்தம் பொருள் உணர்த்துவன. அ, இ, உ (சுட்டு) என்பன

SHANKAR IAS ACADEMY

94. **விடை : A**

இடைச்சொற்கள்

- ஐயோ! இறந்தானே – வினையின் புறத்துறுப்பாய் 'ஐயோ' 'ஏ' என்னும் இடைச்சொற்கள் முன்னும் பின்னும் பல வந்தன.
- நிலத்தினன் – பெயரின் அகத்துறுப்பாய் அத்து, அன்சாரியையும் அன்விகுதியும் என இடைச்சொற்கள் பல வந்தன.
- உண்ணாய் – வினையின் அகத்துறுப்பாய்த் 'ஆய்' என்னும் விகுதி இடைச்சொல் பெற்று வந்தது

95. **விடை : B**

இடைச்சொற்கள்

- நடந்தனன் – வினையின் அகத்துறுப்பாய்த் தகர ஒற்றாகிய இறந்தகால இடைநிலையும் அன்சாரியையும் அன்விகுதியும் என இடைச்சொற்கள் பல வந்தன

96. **விடை : B**

- கற்றதனா லாய பயனென் கொல். இதிலுள்ள 'கொல்' என்னும் அசைச்சொல்லும் இடைச்சொல் ஆகும்.
- இடைச்சொற்கள் தனித்தியங்காமல் பெயரையோ வினையையோ சார்ந்தே வரும்.
- (எ.கா.)
  - உம் – தந்தையும் தாயும்
  - மற்று – மற்றொருவர்
  - ஐ – திருக்குறளை

97. **விடை : B**

இடைச்சொற்கள்

- இசை நிறைப்பன – செய்யுளில் சீர்நிறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் 'ஓ | ஓ' முதலியன
- பொன்னன் – பெயரின் அகத்துறுப்பாய் விகுதிப் பொருள் இடைச்சொல் 'அன்' பெற்று வந்தது

98. **விடை : A**

தெரிநிலை முற்றுவினை

- குளிர்ந்தது நிலம் – இடப்பெயர் கொண்டது
- குவிந்தது கை – சினைப் பெயர் கொண்டது
- அழிந்தது தீமை – குணப்பெயர் கொண்டது
- அற்றது பிறப்பு – தொழிற்பெயர் கொண்டது
- செய்தான் அவன் – பொருட்பெயர் கொண்டது
- வந்தது கார் – காலப்பெயர் கொண்டது

99. **விடை : C**

- இடைச் சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.
- பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப் போல இடைச்சொற்கள் தமிழில் மிகுதியாக இல்லை.

SHANKAR IAS ACADEMY

- ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.
- இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை இடைச் சொற்கள்

100. **விடை : D**

(சொல்) (வேர்ச்சொல்)

- வாழ்க – வாழ்
- வந்து – வா
- அடக்குமுறை – அடக்கு
- கடாவினார் – கடாவு

101. **விடை : C**

- 'நிற்கும்' என்ற சொல்லின் வேர்ச்சொல் 'நில்' ஆகும்.
- 'தாழ்ந்த' என்ற சொல்லின் வேர்ச்சொல் 'தாழ்' ஆகும்.

சொல்	வேர்ச்சொல்	சொல்	வேர்ச்சொல்
கண்டான்	காண்	சென்றான்	செல்
அடங்காமை	அடங்கு	ஆக்குதல்	ஆக்கு
வாழ்க	வாழ்	கூறிய	கூறு
வந்து	வா	ஆழம் பார்த்தல்	ஆழ்
அடக்குமுறை	அடக்கு	அணிகலன்	அணி

102. **விடை : B**

- தேற்றாய் – தேறு
- சொரிந்த – சொரி

சொல்	வேர்ச்சொல்	சொல்	வேர்ச்சொல்
இடையிட்டது	இடையீடு	இடர்ப்பாடு	இடர்
காப்பாய்	கா	இறைவன்	இறை
இருந்த	இரு	ஈடுபாடு	ஈடுபடு
ஈதல்	ஈ	உணர்ச்சி	உணர்

103. **விடை : A**

(சொல்) (வேர்ச்சொல்)

- ஏற்றி – ஏற்று
- உற்ற – உறு
- உணர்ந்தோர் – உணர்
- சாற்றுகேன் – சாற்று

104. **விடை : A**

- 'கொன்றான்', 'சொன்னார்' ஆகிய சொற்களுக்குரிய வேர்ச்சொல் : கொல்,சொல்.

SHANKAR IAS ACADEMY

105. **விடை : B**

- அறியா – அறி
- அறிந்தார் – அறி
- அறுவடை – அறு

சொல்	வேர்ச்சொல்	சொல்	வேர்ச்சொல்
ஆட்டினான்	ஆட்டு	ஆய்வகம்	ஆய்வு
ஆளவந்தார்	ஆள்	ஆடினாள்	ஆடு
ஆற்றுப்படை	ஆற்று	இகழ்ச்சி	இகழ்
இடையிட்டது	இடையீடு	இடர்ப்பாடு	இடர்

106. **விடை : B**

- இன்றைய உலக மாந்தர் அனைவரும், **'மதிமாந்தர்'** (Homo sapiens) எனப்படுவர். இவர்களின் மூல இடம் இன்றைய ஆப்பிரிக்கா.
- ஒன்றரை இலக்கம் ஆண்டுகளுக்குமுன், இவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு, உலகம் முழுவதும் பரவினர்.
- எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் தென்னிந்தியாவிற்கு வந்துவிட்டனர்.
- இதன் காரணமாகவே தென்னிந்தியா, மாந்தர்தம் மூலமொழி தோன்றிய இடமாக இருக்கலாம் என வேர்ச்சொல் ஆய்வறிஞர்கள் இன்று கருதுகின்றனர்.

107. **விடை : D**

சொல் வேர்ச்சொல்

- எய்தல் – எய்து
- எழுந்தான் – எழு
- ஐயப்பாடு – ஐயம்
- ஒலித்தல் – ஒலி

108. **விடை : D**

- வேர்ச்சொல் ஆய்வறிஞர்கள், மூலமொழி எது என்பதை இருகோட்பாட்டின் மூலம் ஆய்வுசெய்து வருகின்றனர்.
- ஒன்று, ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பேசப்படுகின்ற மொழிகள் யாவற்றிற்கும் உரிய மூலமொழியைக் கண்டறிவது.
- இரண்டு, உலகம் முழுவதும் பேசப்படுகின்ற மொழிகளுக்கு உரிய மூலமொழியைக் கண்டறிவது.
- முதலாவதை 'நாகதிராதிக்' (Nostratic Studies) ஆய்வு என்றும் இரண்டாவதைத் 'தாய்மொழி' (Mother Tongue studies) ஆய்வு என்றும் கூறுகின்றனர்.
  - Mother Tongue accepted Article.
  - Nostratic As seen from South India (Article)
    – Stephan Hillyer Levitt, G. Arasendiran and P. Ramanathan

SHANKAR IAS ACADEMY

109. **விடை : C**

சொல்		**வேர்ச்சொல்**
➢ ஈதல்	–	ஈ
➢ தருதல்	–	தா
➢ கொடுத்தல்	–	கொடு
➢ ஈகையான்	–	ஈகை

110. **விடை : C**

➢ **தொழிற்பெயர்**
- வினையாலணையும் பெயர்
- படர்க்கை இடத்தில் மட்டும் வரும்
- காலம் காட்டாது

➢ **வினையாலணையும் பெயர்**
- தொழிலையும் தொழில் செய்த பொருளையும் உணர்த்தும்
- தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்
- காலம் காட்டும்

111. **விடை : B**

தன்மை வினையாலணையும் பெயர்

➢ தன்மை வினைமுற்று, பெயர்த் தன்மை பெற்று வந்தால் தன்மை வினையாலணையும் பெயர் எனப்படும்.
- (எ.கா) எடுத்தேனைப் பார்த்தாயா. எடுத்தேமைப் பார்த்தாயா.

➢ இதில் முதலில் உள்ள எடுத்துக்காட்டு ஒருமையையும் இரண்டாவது எடுத்துக்காட்டு, பன்மையையும் குறிக்கிறது.

முன்னிலை வினையாலணையும் பெயர்

➢ முன்னிலை வினைமுற்று, பெயர்த் தன்மை பெற்று வந்தால் முன்னிலை வினையாலணையும் பெயர் எனப்படும்.
- (எ.கா) சென்றாயைக் கண்டேன். சென்றீரைக் கண்டேன்

➢ இதிலும் முதலில் உள்ள எடுத்துக்காட்டு ஒருமையையும் இரண்டாவது எடுத்துக்காட்டு, பன்மையையும் குறிக்கிறது.

112. **விடை : B**

தெரிநிலை வினைமுற்று

➢ ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும்.

➢ இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.
- (எ.கா.) மாணவி கட்டுரை எழுதினாள்.
  - செய்பவர் – மாணவி
  - காலம் – இறந்தகாலம்
  - கருவி – தாளும் எழுதுகோலும்
  - செய்பொருள் – கட்டுரை
  - நிலம் – பள்ளி
  - செயல் – எழுதுதல்

SHANKAR IAS ACADEMY

113. **விடை : A**

குறிப்பு வினைமுற்று

- பொருள் – பொன்னன்
- இடம் – தென்னாட்டார்
- காலம் – ஆதிரையான்
- சினை – கண்ணன்
- பண்பு (குணம்) – கரியன்
- தொழில் – எழுத்தன்

114. **விடை : C**

படர்க்கை வினையாலணையும் பெயர்

- படர்க்கை வினைமுற்று, பெயர்த் தன்மை பெற்று வந்தால் படர்க்கை வினையாலணையும் பெயர் எனப்படும்.
  - (எ.கா) படித்தவனுக்குப் பரிசு கிடைத்தது.

115. **விடை : B**

முன்னிலை வினையாலணையும் பெயர்

- முன்னிலை வினைமுற்று, பெயர்த் தன்மை பெற்று வந்தால் முன்னிலை வினையாலணையும் பெயர் எனப்படும்.
  - (எ.கா) சென்றாயைக் கண்டேன். சென்றீரைக் கண்டேன்
- இதிலும் முதலில் உள்ள எடுத்துக்காட்டு ஒருமையையும் இரண்டாவது எடுத்துக்காட்டு, பன்மையையும் குறிக்கிறது.

116. **விடை : C**

- வினையாலணையும் பெயர் எதிர்மறைப் பொருளில் வருவதும் உண்டு.
  - (எ.கா) பாடாதவர் பரிசு பெறமுடியாது.
- இதில் பாடாதவர் என்பது எதிர்மறைப் பொருளை உணர்த்துகிறது.

117. **விடை : C**

தெரிநிலை வினைமுற்று

- ஒரு செயல் நடைபெறுவதற்குச் செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறும் முதன்மையானவை ஆகும்.
- இவை ஆறும் வெளிப்படுமாறு அமைவது தெரிநிலை வினைமுற்று எனப்படும்.
  - எ.கா : "மாடு மேயும்"

118. **விடை : D**

எதிர்ச்சொல்

- தோற்பு × கெலிப்பு
- நனைதல் × புலர்தல்
- நெடுமை × சிறுமை
- சுகம் × துக்கம்

SHANKAR IAS ACADEMY

- சுமங்கலி × அமங்கலி
- சுருங்கல் × விரிதல்
- சுசி × அசுசி
- செங்கோல் × கொடுங்கோல்

119. **விடை : C**
- தவம் × அவம்
- தாமதம் × துரிதம்
- திண்மை × நொய்மை
- தூக்கம் × விழிப்பு
- தூரம் × சமீபம்

120. **விடை : D**

ஒரு பொருளைத் தருகின்றன:
- சேர்தல்
- கூடல்
- இணைதல்
- மேற்கண்டவற்றின் எதிர்ச்சொல் – தளர்தல்

121. **விடை : A**
- சௌக்கியம் × அசௌக்கியம்
- தக்கார் × தகவிலார்
- தமர் × பிறர்
- தன்னலம் × பிறன்நலம்
- தலையெடுப்பு × தலையிறக்கம்
- தவம் × அவம்

122. **விடை : C**

(சொல்) (எதிர்ச்சொல்)
- பாலர் – விருத்தர்
- தக்கார் – தகவிலார்
- பிரதட்சணம் – அப்பிரதட்சணம்
- நுண்மை – பருமை
- குணம் – குற்றம்

123. **விடை : A**
- தலையெடுப்பு – தலையிறக்கம்
- நல்வழி – அல்வழி
- தமர் – பிறர்
- நல்வனை – தீவினை

SHANKAR IAS ACADEMY

124. **விடை : B**

- ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும் (பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை).
- தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.

125. **விடை : C**

- தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா
- ணகர ஒற்றினை அடுத்து றகரமும் னகர ஒற்றினை அடுத்து டகரமும் வருவதில்லை
- ஞ், ந், வ் என்னும் எழுத்துகளில் முடியக்கூடிய சொற்கள் அரிதாக உள்ளன (உரிஞ், வெரிந், பொருந், தெவ்).
- ரகத்தை அடுத்து ரகர வரிசை எழுத்துகளும், ழகரத்தை அடுத்து ழகர வரிசை எழுத்துகளும் வாரா

126. **விடை : B**

- 'குழை, கலக்கு, கடை' என்ற வினைச் சொற்களைக் குறிக்கக்கூடிய சொல் **:** அளை

127. **விடை : B**

- முதலைக் கண்ணீர் – பொய் அழுகை

128. **விடை : B**

- கிள்ளுக்கீரை – அற்பமான ஒன்று. மிகச்சுலபமாகச் சமாளித்து விடலாம் என்ற நினைப்பு
- எட்டாக்கனி – எளிதில் அடைய முடியாத அல்லது கிடைக்காத அரிய பொருள்
- ஆகாயத்தாமரை – இல்லாத ஒன்று
- ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது – படித்தது அப்படியே வாழ்வுக்குப் பயன்படாது

129. **விடை : C**

- ஓலை வந்துவிட்டது – ஆணை கிடைத்து விட்டது
- சீட்டு கிழிந்து விட்டது – வேலை போய் விட்டது
- முதலைக் கண்ணீர் – பொய் அழுகை
- மதில் மேல் பூனை – நிச்சயம் இல்லாத நிலை

130. **விடை : A**

மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் **:**

- கயிறு திரித்தல் – இல்லாததனைச் சொல்லுதல்
- கொடிகட்டிப் பறத்தல் – தனிப்புகழோடு வாழ்தல்
- அவசரக் குடுக்கை – எண்ணிக் செயல்படாமை
- மலையேறி விட்டது – பழைய பழக்கம் மறைந்து விட்டது

131. **விடை : C**

- 'பூமி' என்ற பெயர் பொருளையும் 'அழை' என்ற வினைப் பொருளையும் தரும் ஓரெழுத்து ஒருமொழி **:** கூ

SHANKAR IAS ACADEMY

- ஓரெழுத்து ஒருமொழி :
  - கா : சோலை, காவடி, காவல், செய், வருத்தம்
  - சீ : இகழ்ச்சி, அடக்கம், உறக்கம், செல்வம்.
  - ஈ : கொடு, அம்பு, குகை, தேன், திருமகள்

132. **விடை : D**

மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் :

- சீட்டு கிழிந்து விட்டது – வேலை போய்விட்டது
- கயிறு திரிக்கிறான் – இல்லாததைச் சொல்கிறான்
- தாளம் போடுகிறான் – துன்பப்படுகிறான்
- பஞ்சாய்ப் பறக்கிறான் – பொருளின்றி அலைகிறான்

133. **விடை : D**

சொல்	பெயர்	வினை
சிந்து	கடல்; ஓர் ஆறு; ஓர் நாடு	சிதறு
சிலம்பு	மலை; பாதகிண்கிணி	ஒலி; சத்தமிடு
சீ	இலக்குமி; சம்பத்து	சீப்பாய்; கிளறு
சுழி	நீர்ச்சுழி	சுழிப்பாய்
சூடு	வெப்பம்	அணி; சூடுவாய்
செப்பு	செம்பு	சொல்
செயல்	ஒழுக்கம்; தொழில்	செய்க; செய்யற்க

134. **விடை : D**

(சொல்) (பெயர் பொருள்)

- ஆர் – நிறைவு, ஆத்தி
- ஆய் – தாய், வருத்தம்
- உரை – புகழ், பொன்

சொல்	பெயர்	வினை
சொல்	பெயர்	வினை
இளை	பூமி; காவற்காடு	மெலி
இறை	அரசன்; கடவுள்	இறை; வீசு
ஈ	வண்டு	கொடு; தா
ஈர்	சிறுபேன்	பிள; வகிர்; இழு
உடல்	உடம்பு; பொன்	கோபி;வருத்து
உடை	செல்வம்; சேலை	உடை

SHANKAR IAS ACADEMY

135. **விடை : A**

சொல்	பெயர்	வினை
அப்பு	நீர்; கடல்	கனமாகப் பூசு
அடர்	தகடு	நெருங்கு; போர்செய்
அடி	ஆதி; கால்	அடி
அடை	அப்பம்; இலை	துறு; சேர்; காவலில் இடு

136. **விடை : C**

மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் :

- கங்கு கரையில்லை – எல்லை இல்லை
- கொடிகட்டிப் பறத்தல் – தனிப்புகழோடு வாழ்தல்
- கோயில் பெருச்சாளி – பொதுச் சொத்தைத் திருடித் தின்பவன்
- சங்கப் பலகை – விரிந்து அனைவருக்கும் இடம் கொடுப்பது
- புத்தகப் பூச்சி – உலக அறிவின்றி நூலறிவு மட்டுமே உள்ளவன்

137. **விடை : B**

மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் :

- அவலை நினைத்து உரலை இடித்தல் – ஒன்றை எண்ணி மற்றொன்றைச் செய்தல்
- மதில்மேல் பூனை – நிச்சயம் இல்லாத நிலை
- மலையேறிவிட்டது – பழைய பழக்கம் மறைந்து விட்டது
- மனப்பால் குடித்தல் – கற்பனை செய்தல்

138. **விடை : D**

சரியான சொற்றொடர் :

- நாளைக்கு நான் ஊருக்குப் போய் சேர்வேன்
- நான் நேற்று திரைப்படத்திற்குச் சென்றேன்
- இந்தச் வண்டியை இரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் வாங்கினேன்
- நேற்று பால் பொங்கியது

139. **விடை : D**

- 'சங்கப்பலகை' என்ற மரபுத் தொடரின் சரியான பொருள் **:** விரிந்து அனைவருக்கும் இடம் கொடுப்பது

140. **விடை : B**

விலங்குகளின் இளமை மரபு :

விலங்குகள் : இளமை மரபு	
• சிங்கக்குருளை	• குதிரைக்குட்டி
• புலிப்பறழ்	• குரங்குக்குட்டி
• குருவிக்குஞ்சு	• கீரிப்பிள்ளை
• கோழிக்குஞ்சு	• அணிற்பிள்ளை
• ஆட்டுக்குட்டி	• யானைக் கன்று

SHANKAR IAS ACADEMY

• கழுதைக்குட்டி • பன்றிக்குட்டி • நாய்க்குட்டி • எலிக்குட்டி	• எருமைக்கன்று • மான் கன்று • பூனைக்குட்டி

141. **விடை : D**

காய்களின் இளமை மரபு
1. தென்னம்பிள்ளை
2. வாழைக்கன்று
3. மாங்கன்று

விலங்குகளின் இளமை மரபு
- அணிற்பிள்ளை

142. **விடை : A**

தாவரங்கள் : காய்களின் இளமை மரபு	
• அவரைப்பிஞ்சு/அவரைப்பொட்டு • வெள்ளரிப்பிஞ்சு • கத்தரிப்பிஞ்சு • தென்னங்குரும்பை • மாவடு • முருங்கைச் சரடு/முருங்கைப்பிஞ்சு • மாங் கன்று	• பலாமூசு • வாழைக்கச்சல் • இளந்தேங்காய் – வழுக்கை • முற்றியதேங்காய் – நெற்று • வாழைக் கன்று • தென்னம் பிள்ளை

143. **விடை : C**

விலங்குகளின் ஒலிமரபு	
• குதிரை கனைக்கும் • சிங்கம் முழங்கும்/கர்ச்சிக்கும் • நரி ஊளையிடும் • புலி உறுமும் • பன்றி உறுமும் • யானை பிளிறும் • பூனை சீறும்	• பசு கதறும் • ஆடு கத்தும் • கழுதை கத்தும் • நாய் குரைக்கும் • எருது எக்காளமிடும் • குரங்கு அலப்பும் • எலி கீச்சிடும்

144. **விடை : A**

வினைமரபு வினை

- அப்பம் தின்
- ஆடை நெய்தார்
- சுவர் எழுப்பினான்
- சோறு சமை

SHANKAR IAS ACADEMY

145. **விடை : A**

வினைமரபு

- அம்பு எய்தார்
- விதையை விதை
- உமி கருக்கினாள்
- ஓவியம் புனைந்தான்
- கூடைமுடைந்தார்
- சுவர் எழுப்பினான்

146. **விடை : D**

பறவைகளின் ஒலிமரபு	
• ஆந்தை அலறும்	• சேவல் கூவும்
• குயில் கூவும்	• புறா குனுகும்
• மயில் அகவும்	• கூகை/கோட்டான் குழறும்
• காகம் கரையும்	• வாத்து கத்தும்
• கோழி கொக்கரிக்கும்	• வண்டு முரலும்
• கிளி கொஞ்சும்/பேசும்	• குருவி கீச்சிடும்

147. **விடை : A**

விலங்குகளின் தொகை மரபு	
• ஆட்டுமந்தை	• ஆநிரை
• மாட்டுமந்தை	• பசுநிரை
• யானைக்கூட்டம்	• எறும்புச்சாரை

பொருள்களின் தொகுப்பு	
• கற்குவியல்	• மக்கள் கூட்டம்
• சாவிக்கொத்து	• வீரர்படை
• வைக்கோற்போர்	

148. **விடை : B**

கலைச்சொல்:

- பல்லுயிர் மண்டலம் – Bio Diversity
- கதைப்பாடல் – Ballad
- பேச்சாற்றல் – Elocution
- துணிவு – Courage
- நாட்டுப்புறவியல் – Folklore

149. **விடை : C**

- உவமையணி – Simile
- உருவக அணி – Metaphor

SHANKAR IAS ACADEMY

- மெல்லிசை – Melody
- ஆவணக் குறும்படம் – Document short film
- புணர்ச்சி – Combination
- தன்னார்வலர் – Volunteer

150. **விடை : A**

(தமிழ்ச்சொல்) (ஆங்கிலச்சொல்)

- அகழாய்வு – Excavation
- கல்வெட்டியல் – Epigraphy
- செம்மொழி – Classical Language
- பழங்குடியினர் – Tribes

151. **விடை : C**

- ஆளறி சோதனைக் கருவி – Biometric Device
- அட்டை தேய்ப்பி இயந்திரம் – Swiping Machine
- விற்பனைக் கருவி – Point of sale terminal
- ஒளிப்படி இயந்திரம் – Photo copier

152. **விடை : B**

- காப்புரிமை – Patent
- ஆவணம் – Document
- வணிகக் குழு – Guild

153. **விடை : B**

- செயற்கை நுண்ணறிவு – Artificial Intelligence
- உலாவி – Browser
- உரையாடு மென்பொருள் – Chatbot
- கணினிச் செயல்திட்ட வரைவு – Computer Program

154. **விடை : D**

- மறுமலர்ச்சி – Renaissance
- மீட்டுருவாக்கம் – Revivalism
- மனிதநேயம் – Humanism
- நம்பிக்கை – Belief

155. **விடை : D**

- மூன்று – மூணு, மூடு, மூரு, மூஜி
- ஒன்று – ஒண்ணு, ஒகடி, ஒந்து, ஒஞ்சி
- இரண்டு – ஈர்ரெண்டு, எரடு, ரட்டு
- நான்கு – நாலுகு, நாலு, நால், நாங்கு

SHANKAR IAS ACADEMY

156. **விடை : C**

- உபயம் – திருப்பணியாளர் கொடை
- ஐதிகம் – உலக வழக்கு
- உபசரித்தல் – விருந்தோம்பல்
- தேசு – ஒளி

157. **விடை : B**

- பேருந்து – பஸ்
- கல்லூரி – காலேஜ்
- திரையரங்கு – தியேட்டர்
- அலுவலகம் – ஆபீஸ்

158. **விடை : B**

ஏவல் வாக்கியம்:

- திருக்குறளைப் படி.
- மூத்தோர் சொல் கேள்.
  - இத்தொடர்கள் முன்இருப்பவரை ஏவுதல் பொருளில் அமைந்துள்ளன.
  - இவ்வாறு பிறரை ஏவுதல் அல்லது பிறருக்குக் கட்டளையிடும் முறையில் அமைவது ஏவல் வாக்கியம் எனப்படும். இதனைக் கட்டளை வாக்கியம் என்றும் கூறுவர்.

159. **விடை : A**

- எழுவாய் – செயப்படுபொருள் – பயனிலை : நான் பாடத்தைப் படித்தேன்
- செயப்படுபொருள் – எழுவாய் – பயனிலை : பாடத்தை நான் படித்தேன்
- பயனிலை – எழுவாய் – செயப்படுபொருள் : படித்தேன் நான் பாடத்தை
- எழுவாய் – பயனிலை – செயப்படு பொருள் : நான் படித்தேன் பாடத்தை
- செயப்படுபொருள் – பயனிலை – எழுவாய் : பாடத்தைப் படித்தேன் நான்

160. **விடை : A**

- **இரும்பொறை:** தூதுவ! கழுமலத்தில் சோழன் குறித்த நாளுக்கு முன்னரே படையுடன் காத்திருப்பார் என்று சொல்.
- இது நாடகத்தில் இரும்பொறை தூதுவனை விளித்துக் கூறிய கூற்று. இதைச் செய்தி வாக்கியமாக மாற்றலாம்.
- இரும்பொறை தூதுவனிடம், சோழன் குறித்த நாளுக்கு முன்னரே, தான் கழுமலத்தில் காத்திருக்கப் போவதைத் தெரிவிக்குமாறு கூறினான்.(செய்தி வாக்கியம்)

161. **விடை : C**

- எழுவாய் – செயப்படுபொருள் – பயனிலை : நான் பாடத்தைப் படித்தேன்
- செயப்படுபொருள் – எழுவாய் – பயனிலை : பாடத்தை நான் படித்தேன்
- பயனிலை – எழுவாய் – செயப்படுபொருள் : படித்தேன் நான் பாடத்தை
- எழுவாய் – பயனிலை – செயப்படு பொருள் : நான் படித்தேன் பாடத்தை
- செயப்படுபொருள் – பயனிலை – எழுவாய் : பாடத்தைப் படித்தேன் நான்

SHANKAR IAS ACADEMY

- தமிழ்மொழியில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றின் இடங்களை மாற்றி அமைத்தாலும் பொருள் மாறுபடுவதில்லை

162. **விடை : C**

விழைவுத் தொடர்

- ஏவல், வேண்டுதல், வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும் தொடர் விழைவுத் தொடர் ஆகும்.
- (எ.கா.)
  - இளமையில் கல். (ஏவல்)
  - உன் திருக்குறள் நூலைத் தருக. (வேண்டுதல்)
  - உழவுத்தொழில் வாழ்க. (வாழ்த்துதல்)
  - கல்லாமை ஒழிக. (வைதல்)

163. **விடை : B**

கருத்துவகை

- செய்தி தொடர்
- வினாத் தொடர்
- விழைவுத் தொடர்
- உணர்ச்சித் தொடர்

அமைப்புவகை

- தனிநிலைத் தொடர்
- தொடர்நிலைத் தொடர் அல்லது கூட்டுத் தொடர்
- கலவைத் தொடர்

164. **விடை : B**

- Hundred railsleepers were washed away என்பதை, தொடர்வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறுபேர், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று ஒரு செய்தித்தாள் வெளியிட்டது.
- Railsleeper என்பது தொடர்வண்டியின் போக்குவரத்துப் பாதையான தண்டவாளத்தில் உள்ள குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும். அதனை உறங்கிக் கொண்டிருந்தோர் என மொழிபெயர்த்தது பெரும்பிழையே.

165. **விடை : D**

- Camel என்பதற்கு வடம் (கயிறு), ஒட்டகம் என இருபொருள் உண்டு.
- ஊசி காதில் வடம் நுழையாது என்னும் வேற்றுமொழித் தொடரை 'ஊசி காதில் ஒட்டகம் நுழையாது என்று மொழிபெயர்த்துப் பயன்படுத்துகிறோம்.
- இத்தொடரில் வடம் என்பதே பொருத்தமான சொல்லாக அமையும் (அதாவது ஊசி காதில் நூல் நுழையுமே அன்றிக் கயிறு நுழையாது என்பதே).

166. **விடை : C**

- Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது.

SHANKAR IAS ACADEMY

- ஆகவே,
  - Telegraph – தொலைவரி
  - Television – தொலைக்காட்சி
  - Telephone – தொலைபேசி
  - Telescope – தொலைநோக்கி
  - Telemetry – தொலைஅளவியல்
- முதலிய சொற்கள் என்றவாறு முன்ஒட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன.
- இதற்கு மாறாக,
  - Transcribe – படியெடுத்தல்
  - Transfer – மாறுதல்
  - Transform – உருமாற்றுதல்
  - Transact – செயல்படுத்துதல் என்றவாறு மொழிபெயர்க்கப்படுகின்றன.
- இங்கு Trans என்ற முன்ஒட்டை வைத்து மொழிபெயர்க்கவில்லை. இவ்வாறு இடம்பார்த்து மொழிபெயர்ப்பு, முறையாகச் செய்யப்பட வேண்டும்.

167. **விடை : C**

"காசினியில் இன்று வரை அறிவின் மன்னர்
கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி
பேசி மகிழ் நிலை வேண்டும்"
என்று குலோத்துங்கன் குறிப்பிடுகிறார்.

168. **விடை : D**

- அருப்புக்கோட்டை – அருவை
- சோழநாடு – சோணாடு
- மயிலாப்பூர் – மயிலை
- மன்னார்குடி/மன்னை – மண்ணை

169. **விடை : D**

- வி – நிச்சயம், வித்தியாசம், பிரிவு, கொள்திரம், உபசர்க்கம், ஆகாயம், கண், காற்று, திசை, பறவை, அழகு, விசை, விசும்பு, அறிவு
- வீ – மலர், சாவு, கொள்ளுதல், நீக்கம்

170. **விடை : B**

- 'திருக்கோவிலூர்' என்ற ஊர்ப்பெயர் மருவி 'கோவலூர்' என வழங்கப்படுகிறது.
- 'தகடூர்' 'என்ற ஊர்ப்பெயர் மருவி தருமபுரி என வழங்கப்படுகிறது.

171. **விடை : A**

- மதுரை – கூடல் மதிரை/மருதை/ஆலவாய்

172. **விடை : D**

- குபேரன், நான்முகன் – த
- பகை, நான்முகம், குறை, பரப்பு, தருக, தாவுதல் – தா

SHANKAR IAS ACADEMY

173. **விடை : D**

- நூ – எல், யானை, ஆபரணம், நூபுரம்
- நு – தியானம், நேசம், உபசர்க்கம், தோனி, நிந்தை, புகழ், ஐயம், நேரம்

174. **விடை : B**

- வேழம் – யானை, மூங்கில், கரும்பு
- வேங்கை – விலங்கு, ஒருவகை மரம்

175. **விடை : D**

- மணற்கேணி – அறிவு வளரும் விதம்
- செல்வர் முன் வறியவர் – கல்வி கற்றவர் முன், தாழ்ந்து நிற்றல்
- துலாக்கோல் – நடுவுநிலைமைத் தன்மை
- கடையர் – கல்லாதவர் நிலை

176. **விடை : C**

- தூதுவளை – தூதுளை, சிங்கவல்லி ஞானப்பச்சிலை
- கையாந்தகரை – கரிசலாங்கண்ணி

177. **விடை : B**

- **வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்**
  ஐந்தும் அகத்தே நகும்.
  - பொருள் : வஞ்சமனம் உடையவனது பொய்யொழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்கும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும்.
- **வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்**
  தான்அறி குற்றப் படின்.
  - பொருள் : தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்குமானால் வானத்தைப் போல் உயர்ந்துள்ள தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்

178. **விடை : C**

- **நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
  வாழ்வாரின் வன்கணார் இல்.
  - பொருள் : மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல் துறந்தவரைப் போல் வஞ்சனைச் செய்து வாழ்கின்றவரைப் போல் இரக்கமற்றவர் எவரும் இல்லை.

179. **விடை : D**

- **கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன**
  வினைபடு பாலால் கொளல்.
  - பொருள் : நேராக இருந்தாலும் அம்பு கொடியதாக இருக்கிறது. வளைவுடன் இருப்பினும் யாழின் கொம்பு இனிமையைத் தருகிறது. அதுபோல மக்களின் பண்புகளை அவரவர் தோற்றத்தால் அல்லாமல் செயல்வகையால் உணர்ந்துகொள்ள வேண்டும்.

SHANKAR IAS ACADEMY

180. **விடை : A**

- **அரங்குஇன்றி வட்டுஆடி அற்றே நிரம்பிய**
  நூல்இன்றிக் கோட்டி கொளல்.
  - பொருள் : அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசதல், சூதாடும் அரங்கு அழைக்காமல் வட்டுக்காயை உருட்டி ஆடுவது போன்றது.

181. **விடை : C**

- **உளர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
  களர் அனையர் கல்லா தவர்.
  - பொருள் : கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்றவர். அவர் உயிரோடு இருக்கிறார் என்பதைத் தவிர அவரால் வேறு எந்தப் பயனும் இல்லை.

182. **விடை : B**

- **ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
  தேர்ந்துசெய் வஃதே முறை.
  - பொருள் : எதையும் நன்கு ஆராய்ந்து ஒருபக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.

183. **விடை : D**

- **குடிபுறம் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்**
  வடுஅன்று வேந்தன் தொழில்.
  - பொருள் : குடிகளைப் பிறர் வருந்தாமல் காத்து, தானும் வருந்தாமல் காப்பாற்றி, அவற்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில் பழி அன்று.

184. **விடை : B**

- அரம்போன்ற கூர்மையான அறிவு– கூர்மையான அறிவுடையவராயினும் நற்பண்பில்லாதவர்
- ஓரறிவுயிராகிய மரம் – மக்களுக்குரிய நற்பண்பு இல்லாதவர்
- பகல் காலத்திலும் இருள் – பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவன் நிலை
- நற்பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம் – தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கப்படும் பால்

185. **விடை : B**

- **அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய**
  வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.
  - பொருள் : நன்மை இல்லாதச் சொற்களைக் கண்டபோது வருந்தும்படியாக இடிந்துச் சொல்லி, உலகநடையை அறிய வல்லவரின் நட்பை ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

186. **விடை : D**

- **குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
  கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

SHANKAR IAS ACADEMY

- பொருள் : உயர்ந்த குடியில் பிறந்து, தன்னிடத்தில் வருகின்றப் பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்பு கொள்ளவேண்டும்

187. **விடை : C**

➢ **அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
வற்றல் மரம்தளிர்த் தற்று.

- பொருள் : பாலை நிலத்தில் உள்ள வாடிப்போன மரம் தளிர்க்காது. அதுபோல, நெஞ்சில் அன்பு இல்லாத மனிதர் வாழ்க்கை தளிர்க்காது.

188. **விடை : A**

➢ **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
என்பும் உரியர் பிறர்க்கு.

- பொருள் : அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தமக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

189. **விடை : D**

➢ **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
அனைத்தே புலவர் தொழில்.

- பொருள் : மகிழும் படியாகக் கூடிப்பழகி வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

190. **விடை : B**

➢ **செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து

- பொருள் : நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

➢ **நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
அன்றே ஒழிய விடல்.

- பொருள் : நன்மையே தருவது என்றாலும், நடுவுநிலைமை தவறுதலால் வருகின்ற வளத்தை, அப்போதே உள்ளத்திலிருந்து போக்கி விட வேண்டும்

191. **விடை : C**

➢ **கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்**
இல்லாதாள் பெண்காமுற்று அற்று.

- பொருள் : கற்றவரின் அவையில் கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புதல், முலை இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.

➢ **கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
சொல்லாது இருக்கப் பெறின்.

- பொருள் : கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்கப் பெற்றால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவரே ஆவார்

SHANKAR IAS ACADEMY

➢ **நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
மண்மாண் புனைபாவை அற்று.

- பொருள் **:** நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராய வல்லவான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

➢ **விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
கற்றாரோடு ஏனை யவர்.

- பொருள் **:** கற்றவர்க்கும் கல்லாதவருக்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டிற்கு இணையானது.

192. **விடை : D**

➢ **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

- பொருள் **:** ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது

193. **விடை : C**

➢ **கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்**
நடுவொரீஇ அல்ல செயின்.

- பொருள்**:** தன் நெஞ்சம் நடுவுநிலை நீங்கித் தவறு செய்ய நினைக்குமாயின், நான் கெடப்போகின்றேன் என்று ஒருவன் அறிய வேண்டும்.

194. **விடை : C**

➢ **அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
நின்றது மன்னவன் கோல்.

- பொருள் **:** அந்தணர் போற்றும் மறைநூலுக்கும் அறத்திற்கும் அடிப்படையாய் நின்று உலகத்தைக் காப்பது அரசனுடைய செங்கோலாகும்.

195. **விடை : D**

➢ **இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
கெடுப்பா ரிலானுங் கெடும்.

- பொருள் **:** கடிந்து அறிவுரைக் கூறும் பெரியாரின் துணை இல்லாதக் காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்ககும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான்.

196. **விடை : A**

➢ **கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்**
களைகட் டதனோடு நேர்.

- பொருள் **:** கொடியவர் சிலரைக் கொலைத்தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைச் களைவதற்க்கு நிகரான செயலாகும்

SHANKAR IAS ACADEMY

197. **விடை : A**

➢ **நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
பண்புள பாடறிவார் மாட்டு.

- பொருள் : ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும், பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்லப் பண்புகள் உள்ளன.

198. **விடை : C**

➢ **பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
மண்புக்கு மாய்வது மன்.

- பொருள் : பண்பு உடைய சான்றோரின் வழியில் நடப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது; இல்லாவிட்டால் மண்ணுக்குள் புதைந்து அழிந்திருக்கும்.

199. **விடை : D**

➢ **கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க**
முன்னின்று பின்நோக்காச் சொல்.

- பொருள் : ஒருவருக்கு நேர்நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால், அவர் இல்லாதபோது புறங்கூறுதல் கூடாது.

200. **விடை : A**

➢ **கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை**
உள்ளினும் உள்ளஞ் சுடும்.

- பொருள் : கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லும் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்.

* * * * *

SHANKAR IAS ACADEMY